**<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்.</u>**

**<u>O.S. No. 379/2012</u>**

**<u>நாள்.10.06.2026</u>**

**<u>வா.சா. 1</u>- ராமலட்சுமி**

**<u>5,7 மற்றும் 9 முதல் 14 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

நான் எதுவரை படித்துள்ளேன் என்றால் 10 வது வரை படித்துள்ளேன். இந்த வழக்குச் சொத்தின் சர்வே எண் என்ன என்றால் தெரியாது. இந்த வழக்குச் சொத்து எனக்கு எப்படி கிடைத்தது என்றால் என் பெரியப்பா பெயரில் இருந்து என் அப்பாவுக்கு கிடைத்தது. என் பெரியப்பா பெயர் என்ன என்றால் பெரியசாமி தேவர். மேற்படி பெரியசாமி தேவர் உயிருடன் உள்ளாரா என்றால் இல்லை இறந்துவிட்டார். பெரியசாமி தேவருக்கு சொத்து எப்படி கிடைத்தது என்றால் தாத்தா முத்தையா தலைவர் மூலமாக கிடைத்தது. தாத்தா முத்தையா தலைவருக்கு சொத்து எப்படி கிடைத்தது என்றால் பூர்வீகச் சொத்து. தாத்தா முத்தையா தலைவருக்கு அவரது பெயரில் சொத்திற்கு பட்டா இருந்ததா என்றால் ஆமாம். மேற்படி பட்டாவை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. முத்தையா தலைவர் யார் யாருக்கு என்னென்ன ஆவணங்களை எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் உயில் எழுதிக்கொடுத்துள்ளார். மேற்படி உயிலில் எவ்வளவு இடத்தை எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் 52 சென்ட். மேற்படி உயிலில் நான்கு பக்க எல்கை சொல்லப்பட்டுள்ளதா என்றால் ஆமாம். எனக்கு யார் என்ன ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் என் அப்பா எனது பெயருக்கு ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளார் அது என்ன ஆவணம் என எனக்குத் தெரியாது. என் அப்பா எனது பெயருக்கு எழுதிய ஆவணத்தில் சொத்து அவருக்கு எப்படி பாத்தியப்பட்டது என சொல்லியுள்ளாரா என்றால் அதுபற்றி தெரியாது. உயில் மூலமாக சொத்து என் அப்பா மற்றும் பெரியசாமி தேவருக்கு சொத்து கிடைத்தது என்றால் சரிதான். மேற்படி உயில் ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆமாம். பெரியசாமி தேவரின் இறப்புச் சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆமாம். பெரியசாமி தேவரின் இறப்புச் சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை, பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

முத்தையா தலைவருக்கு தாவாசொத்தில் எந்த உரிமையும் இல்லை அதனால் அவருக்கு வா.சா.ஆ.7 உயிலை பிறப்பிக்க எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 ஏற்பாடு ஆவணத்தை பிறப்பிக்க எனது தந்தைக்கு உரிமை இல்லை, மேற்படி ஆவணம் மோசடியானது என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 பட்டா எண்.257 நம்பித்தேவர் மனைவி சின்னத்தாய் பெயரில் உள்ளது என்றால் சரிதான் ஆனால் என் அப்பா பெயருக்கு பட்டா உண்டு. தாவா சொத்து முழுவதும் சின்னத்தாய்க்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டது, மேற்படி உரிமையை மறைத்து இந்த வழக்கை இந்த நீதிமன்றத்தில் சின்னத்தாயின் வாரிசுகளில் ஒருவரான அவரது கணவர் நம்பித்தேவரை மட்டும் சேர்த்து மற்ற வாரிசுகளை சேர்க்காமல் வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.7 உயில் ஆவணத்தை முதலில் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை, இந்த வழக்கில் 09.04.2026 ல் தான் மேற்படி உயிலை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.7 உயில் ஆவணத்தின் அசலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை, சான்றிட்ட நகலை தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான் அது உண்மையான நகல் தான். வா.சா.ஆ.7 உண்மையான நகல் இல்லை, அசலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.3 ல் 52 சென்ட் இடம் தான் சொல்லப்பட்டுள்ளது, தென்பாதி, வடபாதி என குறிப்பிட்டுச் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.7 உயில் ஆவணத்திலும் 52 சென்ட் இடம் தான் சொல்லப்பட்டுள்ளது, தென்பாதி, வடபாதி என குறிப்பிட்டுச் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல நான்கு மால் உண்டு. என்னிடம் காட்டப்படும் பிராதில் தபசில் சொத்து விபரத்தில் சர்வே எண்.362/4 ல் 0.41.57 ல் தென்பாதி 0.21.0 ஏர் என காட்டியுள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.7 மற்றும் வா.சா.ஆ.3 மோசடி ஆவணங்களில் சொல்லப்படாமல் நாங்களாகவே பிராதில் தபசில் சொத்து விபரத்தில் சர்வே எண்.362/4 ல் 0.41.57 ல் தென்பாதி 0.21.0 ஏர் என காட்டியுள்ளோம் அது நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

தபசில் சொத்து சின்னத்தாய்க்கு பூர்வீகமாகப் பாத்தியப்பட்டு, அவரது வாரிசுகளால் 50 ஆண்டுகளாக அனுபவித்து வரப்படுகிறது என்றால் சரியல்ல நாங்கள் தான் அனுபவித்து வருகிறோம். தபசில் சொத்து எனது பெயரில் அனுபவத்தில் உள்ளதைக் காட்ட எனது பெயரிலான பட்டா நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. தாவா சொத்தினை அனுபவத்தில் உள்ளதைக் காட்ட சாகுபடி அடங்கல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கும் எனக்கும் எனது முன்பாத்தியஸ்தருக்கும் எந்த உரிமையும் அனுபவமும் கிடையாது என்றால் சரியல்ல. தபசில் சொத்து சின்னத்தாய்க்கு பூர்வீகமாகப் பாத்தியப்பட்டது, அதை அபகரிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.6 பாத்தியமில்லாத சொத்திற்கு செலுத்தப்பட்ட தீர்வை ரசீது என்றால் சரியல்ல என் அப்பாவுக்குப் பாத்தியப்பட்டது. தாவா சொத்துக்கும் எனக்கும் எனது முன்பாத்தியஸ்தருக்கும் எந்த உரிமையும் அனுபவமும் கிடையாது இந்த வழக்கு பிரதிவாதிகளின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**5,7 மற்றும் 9 முதல் 14 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.**

**மறுவிசாரணை இல்லை.**

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.06.10 18:44:51 +0530